**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.523/2022**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பம்பையம்மாள் | Caste | : |
| Father 's Name / Husband Name | : மூக்கன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(16.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேலக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு கட்ராம்பட்டி திருமங்கலம் பஸ்ஸில் சென்றேன். பஸ் திருமங்கலம் 8 ம் நம்பர் பேருந்தில் ஏறினேன். எனது கையில் மஞ்சப்பையில் 3 பவுன் தங்க சங்கிலி வைத்திருந்தேன். பின்பு போகும்போது யாரோ ஒருவர் எனது மஞ்சபையில் இருந்த சங்கிலியை அறுத்து எடுத்துவிட்டார்கள். நான் திருடியதை அறிந்து எனது தங்கையை அழைத்துக் கொண்டு திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கைரேகை என்னுடையது தான். அந்த புகார் அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்க செயின் என்னுடையது தான். அந்த நகையை நான் நீதிமன்றத்தில் மனு செய்து திரும்பு பெற்றுக் கொண்டேன். **அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி நகை காணாமல் போனது மதியம் 12 மணி. நான் உடனேயே காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நகையை யார் எடுத்தார்கள் என்றும் கண்டுபிடிக்க இயலவில்லை என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை